உ

கணபதி துணை.

# மறைசையந்தாதி.

யாழ்ப்பாணத்து நல்லூர்

## சின்னத்தம்பிப்புலவர்

அருளிச்செய்தது.

இது

பெற்பாடியூர்

## சதாசிவப்பிள்ளையால்

சென்னபட்டணம்

வித்தியாநுபாலனயந்திரசாலையில்

அச்சிற்பதிப்பிக்கப்பட்டது.

ஏழாம்பதிப்பு.

குரோதி௵ புரட்டாதி௴.

இதன்விலை

## ஆக்கியோன்பெயர்.

செந்தா தியன்மணிப் பூண்புலி யூரற்குச் சேர்ந்தளித்த
சிந்தாத் தியானஞ்செய் வில்லவ ராசன் றிருப்புதல்வ
னந்தா வளர்ந்திகழ் நல்லைச்சின் னத்தம்பி நாவலன்சி
ரந்தாதி மாலையை வேதாட வீசற் கணிந்தனனே.

உ

கணபதி துணை.

# மறைசையந்தாதி.

## காப்பு.

அந்தமு மாதியு மில்லா மறைசையி லத்தர்தம்மேற்
செந்தமிழ் நூற்பொரு ளந்தாதி பாடச் சிலம்பிலன்னை
யிந்தன வாணுதற் சுந்தரி யம்பிகை யீன்றெடுத்த
சுந்தர வீரகத் திச்சே தகன்றாட் டுணை துணையே.

திருவா ரணங்கு மணமகன் பூசித்த செல்வர் வெள்ளைக்
கருவா ரணங்குமி றும்பண்ணை சூழ்மறைக் காடரிசை
மருவா ரணங்கு திரையாரைப் பாடுமென் வாய்க்கவிதைக்
கிருவா ரணங்குசெய் பூண்முலைப் பாமயி லென்றுணையே.(௧)

என்று டலையொன்று காலனைத் தாக்கி யெழிற்கனக
மன்று டனைச்செய்து வான்பரவைப்பெயர் மண்ணும் விண்ணு
சென்று டலைக்கடை வாயிற்படியினுஞ் சேர்ந் துவைகு [ம்
முன்று டலைவைப் பதுமறைக் காட்டி லுறைபரனே. (௨)

பரமரம் பாலிகைச் செம்பவ ளக்கொடி பங்கர்சுரும்
பரமரம் பானை யெரித்தார் மறைசைப் பதியர்வரிப்
பிரமரம் பாடிய பொற்கொன்றைத் தாமரைப் பேசுதியோர்
துரமரம் பாவிநெஞ் சேவினை யாங்கருந் தாதினுக்கே. (௩)

கருந்தாதை யன்ன கயவர்தம் மீதிற் கவிதைசொல்லி
வருந்தாதை யானனன் வேதா ரணியன்வை வேற்குகனைத்
தருந்தாதை தெய்வ மணங்கமழ் சேவடித் தாமரைமேற் [பே.
பொருந்தாதை யோநினை வில்லாவென் சித்தப் பொறிச்சுரு

சுரும்பர வைக்கிசை தாமரை யோபெருந் தொல்புவியோ
கரும்பர வைக்கண் ணியலேது தூதிருட் காலமுல்லை
யரும்பர வைப்பயி லும்வா ணகையல்கு லன்னமென்ன
வரும்பர வைக்கு நடந்தார் மறைசை வரையிறையே. (ரு)

வரைச்சங் கரிக்கு மணவாளர் கூடல் வளர்ந்திடுமூ
வுரைச்சங் கரிக்கு வனஞ்சூழ் மறைசையி லுத்தமனா
தரைச்சங் கரிக்கு விடப்பாணி சச்கரத் தானைதொட்ட
திரைச்சங் கரிக்குந் தெரியாப் பதநிழல் சேர்மின்களே. (சு)

மின்னஞ்சு கங்கைச் சடாதரன் சத்த விடங்கன்றிரை
வன்னஞ் சுகந்தவன் மாமறைக் காடற்கு மாதொரிராப்
பன்னஞ் சுகமென வேள்காம காண்டப் பகழியினு
லின்னஞ் சுகமில்லை யென்றத்தை யோது மிளந்தத்தையே. ()

தத்தலை வேலையன் காணாத வேதத் தனிவனத்து
முத்தலை வேலையன் வெற்பினம் மாது முளரியடி
யத்தலை வேலையன் முட்சொரி பாலை யருஞ்சுரத்து
வைத்தலை வேலையன் பாலென்னை நாடி வரவெண்ணுமே. ()

வரபர சங்கர வேதாரணிய மடங்க லஞ்சுஞ்
சரபர சங்கர ளம்பொதி வாய்விழித் தையல்பங்கி
னரபர சங்க ரவிபோ லொளியி னணிதிகழும்
புரபர சங்கர வாகம ஞர்வரும் போதத்திலே. (கூ)

போத வனத்த ரவிராழி விற்கதை பூட்டுசிலை
மாத வனத்தன் மனுதிக்கெட் டாத வரதனங்கி
யாத வனத்த நகுமதி மூன்றுக ணன்பொறியார்
வேத வனத்தன் பதம்பேணிற் பாச விலங்கறுமே. (க0)

விலங்க லரிக்குலஞ் சூழ்மறைக் காடன் விரிந்ததுழா
யலங்க லரிக்கரு மாவுரி லோர்புற் றமர்ந்திருக்கு
மிலங்க லரிக்கட் களக்கறை யானைச்சற் றெண்ணுநெஞ்சே
கலங்க லரிக்குநந் தீவினை யான் கருங்கலையே. (கக)

கருங்கலை மாறுமென் சித்தா சனம்புகுங் கன்றுதலோ
னருங்கலை மாறுமறை வேதா ரணிய னணிவரைமேன்
மருங்கலை மாறுநிக் கன்முலை யிருங்கள் வார்தடங்கண்
பொருங்கலை மாறென்று வந்தநுண் டாகிற் புகன்றிடுமே. ()

புகரானை யீரு முரியானை வெண்பொருப் பானையெண்ணம்
பகரானை மேய்த்து வெண்பற்றானை யாற்கைப் பகட்டைக்க
யகரானை யச்சுட ராழிதொட் டோற்கரி யானைமறை [வ்வி
நகரானை யன்றிச் சொலாதிறைஞ் சாதென்ற னுச்சிரமே. ()

சிரவர விந்தம் புனைமறைக் காடத்ரி சூலங்கொண்ட
கரவர விந்தம் பணித்தோன் மலைத்தென்றற் கன்றுயிர்க
வரவர விந்த மடநடைக் கோமள வஞ்சியிரு
ளிரவர விந்த மெனக்கிடந் தாள்பின்னை யென்செய்வளே.()

செய்யரைக் கோடியன் மாவுரி யாரைச் செழுங்கனன்மா
கையரைக் கோடி புனைமறைக் காடரைக் கண்ணிற்கண்டாற்
பையரைக் கோடிமின் னார்மய லால்வரும் பாவமெல்லா
மையரைக் கோடி யருந்துக ளாகு மறிசித்தமே. (க௫)

சித்திர வன்னி கருங்கொங்கை பங்கர்செற் றூர்புரமூன்
றத்திர வன்னிக் கருணைகை யார்க்கிட மாகமநாள்
மித்திர வன்னியும் பூவையுங் கேட்டு வியந்துரைக்கும்
பத்திர வன்னி மரஞ்சேர் மறைசைப் பதியகமே. (க௬)

பதிகம் பரிக்குங் குழன்மாத ராயப் பரவையுள்ளே
வதிகம் பரிக்கு நிகர்விழி யாய்மலை மாதுகங்கா
ளிதிகம் பரிக்கு மணியாக மீந்தரு ளீசர்முத்தம்
பொதிகம் பரிக்குந் திரைவேலை வேத புரிவரைக்கே. (க௭)

புரியா ரணந்த னறியாப் பதம்பெறப் பொற்கயிலைப்
பெரியா ரணந்தனை வென்னடை பாகர் பிறப்பிணிலங்
குரியா ரணந்த வளமறைக் காட்டைக் குறித்திருந்து
மரியா ரணந்தன் சிரமேற் புலித்தல மானவரே. (க௮)

மானத் தரக்கரந் தைப்பட வீர்த்துரி வாங்கினர்கற்
றூனத் தரக்க ரரசட்க வூன்றிய தாளர்குடப்
பானத் தரக்கர விந்தத்தின் மேற்றுயில் பன்னிணமறைக்
கானத் தரக்கர மைந்துணர் வீர்வினைக் கட்டறுமே. (௧௯)

அறுத்தவித் தாரச் சமைத்தபின் னைக்குகந் தார்பொதியக்
குறுத்தவித் தார முனிக்கருள் கோலக் குழகரராப்
பொறுத்தவித் தாரணி யேத்தா ரணபுரம் போந்துகரு
வறுத்தவித் தாக்குவ தல்லாது வேறு மருந்தில்லையே. (௨0)

மருக்கர வீரநின் னேதியைக் காரென்று மஞ்ஞையெல்லா
முருக்கர வீர வயில்விழி யாய்நட முற்றனவைந்
திருக்கர வீரகத் திச்சே தகன்றந்த சீர்மறைசை
யெருக்கர் வீர மதிவேணி வெற்பி னெழிலியன்றே. (௨௧)

அன்றுலி னூட்டந் துயின்றே னிகரண்ண லேதிருமான்
பொன்றுலி நாட்டநஞ் சுண்டார் மறைசைப் பொருப்பகத்தி
லொன்றுலிநாட்டவழ்கார்போலும்வார்குழலொண்டொடியூர்
குன்றுலி நாட்டவர் கொள்ளா ருனது குளிர்முத்தமே. (௨௨)

முத்திரு மாதங்க வார்முலை பாகர் முதுமறைசை
மெய்த்திரு மாதங்க மாற்கரி யாரை விளம்புகிலீர்
பத்திரு மாதங் கருவயி னூர்றிய பாழுடம்பை
வைத்திரு மாதங்கத் தென்றிசைக் கூற்று வருங்கடைக்கே. ()

வருகர நாக மகவான் பதமும் வனசப்பிரான்
பொருகர ளுகம் பிளந்தான் பதமும் புகலின்மிக்கோ
முருகர நாகர் பணிமா முகரத்தன் மூவர்தமிழ்க்
குருகர ளுகை மருங்குழை யாற்பணி யொண்டவர்க்கே. (௨௪)

ஒண்டேதை யுண்புற வீர்மறந் தாரெம தாரர்முன்னூண்
மண்டேதை யாக்கிய சோறீந் திடமகிழ்ந் தார்வரம்பி
னண்டேதை யால்வெயில் காய்மறைக் காட்டுறை நாகமணி
வண்டேதை யோதிக்குச் செம்பாதி யாதி மணிவரைக்கே. (௨௫)

மணிக்குட நாடகன் மாறன் பதாகை வரித்தரநற்
கணிக்குட ஞாடக வாழுமென் ருலிம்மை காயுமையற்
பிணிக்குட ஞடகப் பொற்கொன்றைவாங்கும் பெருமறைசை
பணிக்குட நாடக மால்பணி யாதி யரனிடத்தே. (௨௬)

இடங்கர டக்கய மேனின்று கூப்பிட் டிரங்குமந்தத்
தடங்கர டக்கயங் காத்தோன் சரமனைத் தையல்கன்ம
கடங்கர டக்கய மேருகு நான்மறைக் கான்புவனி
விடங்கர டக்கய நீர்போ லெனைமுத்தி மேல்வைப்பரே. ()

மேல்விண்டு நாயக வில்லார் மறைசை விமலரிடப்
பால்விண்டு வேதன் வலப்பாலு மாகப் படைத்தவர்வா
யால்விண்டு நுனிரை சுற்றுஞ் சிலம்பிக் கரசளித்த [லுமே.
போல்விண்டு முத்தருங் கொள்வாரென் னூற்கவிப் புன்சொ

புன்னுக வேலி மறைக்காட ரன்பரைப் புண்டரிக
மின்னுக மாயவ னுன்முகன் வாசவன் மேற்பதிக்கு
மன்னுக வைப்பவர் காடோடு மாடு மகிழ்ந்துபுன்சொல்
பன்னுக நஞ்சுடை பூணார தாகப் படைத்தவரே. (௨௯)

படைக்கந் தரத்தர் இருமறைக் காடர் பணிவரைமே
லடைக்கந் தரத்த நிறத்தா மரைமுகத் தன்னமன்னு
டொடைக்கந் தரத்த மருஞ்சுரு ளோதிச் சுரும்பினங்கா
ளிடைக்கந் தரம்வரி னுங்களுக் கேபழி யேற்றிடுமே. (௩௦)

ஏற்றுக் கொடியர் திருமறைக் கானத்த ரேழுலகப்
பேற்றுக் கொடியத்தர் இக்காடை நாதரைப் பேணிக்கொண்
கூற்றுக் கொடியற்கு மஞ்சே னினியிக் குவலயத்தே [டேன்
தோற்றுக் கொடிவரை கேதன மாதுந் தொலைந்தனளே. ()

தொலைவே தனையர் கருக்குழி வாய்ப்படுந் தொல்லைச்சென்ம
நிலைவே தனையென் றுழலூசல் போல நினையுநெஞ்சி
னுலைவே தனைய வொருகாலஞ் சேலென் றுரைக்கினென்றுந
கலைவே தனையன் பணிமறைக் காடவென் கன்முனின்றே.()

கண்ணச் சிராக வரிசூழுங் காமறைக் காடர்செந்தீ
வண்ணச் சிராசல மேருவில் லாளி வரைவிடுதே
ருண்ணச் சிராக விழிக்கால வேலுறை விட்டுவிட்டுப்
பெண்ணச் சிராவல வாவிறங் காது பிடியன்னமே. (௧௩)

அன்னம் பல்வ நறும்புன்னைச் சேக்கை யமர்மறைசை
முன்னம் பலவன் முடித்த சடாதர மூர்த்திதில்லைப்
பொன்னம் பலவன் பிஞூகங் காளன் புராந்தகன்சீர்
வன்னம் பலவன் பசுபதி நாதனென் வான்றுணையே. (௧௪)

வானப் பிறையையும் வாடைப் புலியையு மையல்செய்யுந்
தேனப் பிறையையுந் தென்றலையுங்கண்டு சில்லரிக்கண்
மீனப் பிறைக்கு மடமானை மேவிலர் வேடனிடு
மூனப் பிறைச்சிக் குகந்தார் மறைசை யுகந்தவரே. (௧௫)

உகந்தா வடிக்கு மிடையர்தம் பாலனை யுண்டுகடற்
சகந்தா வடியனுக் கெட்டாத ஞான தலத்துமுத்திச்
சுகந்தா வடிதமிழ் நான்மறைக் காட துணைவரியம்
பகந்தா வடிசெல் குழையாண் மருவிய பாகத்தனே. (௧௬)

பாக னகனி மொழியா யுனது பணிமுகமாங்
கோக னகநில வுந்துணைப் பானலிற் கோடல்கண்டே
ஞாக நகநிமி ரும்புலிப் பாதரு நாடவன்று
மாக னகநிலை மன்றுடி வேத வனமலைக்கே. (௧௭)

மலைக்கார் முகந்தர யாழைப் பழிமொழி மான்குறையா
நிலைக்கார் முகமதி யாள்பங்க னேநிறை காய்க்கந்திச்சு
பூலைக்கார் முகந்திடும் வேதா ரணிய வருந்துயரங் [திலே.
தொலைக்கார் முகந்தமி யேன்சொல்லு வேனென்ன சொன்ன

சொன்னச் சிலம்பு குழைத்தவில் லான்சுரு திப்பதியான்
வன்னச் சிலம்பிக் கரசளித் தான்வெற்பின் மாணிழைகண்
மின்னச் சிலம்பு கலைநனை யாமன்மெய் வேர்வரும்பச்
சின்னச் சிலம்படி யாய்குடைந் தாயொரு தேன்சுனையே. ()

தேன்றதும் பிக்குளிர் தாமரைப் பிடிகைச் செல்வனும்வாய்
நான்றதும் பிக்கருண் மாயனும் வாண்புலி நண்ணிபதங்
கீன்றதும் பித்தவ ராற்றிட்டு மோதிடை யாவுலக
மீன்றதும் பிக்குழல் சேர்மறைக் காட னிரண்டையுமே. ()

இரண்டந் தகரந் திருந்தன்ன பார்வை யிணைச்சுரும்பர்
புரண்டந் தகர மளவிய கோதையைப் பொன்னில்வைத்தார்
முரண்டந் தகரவை வேலா கடற்றிரை முத்தச்சங்கங்
குரண்டந் தகர வெறிமறைக் காடன் குளிர்கிரிக்கே. (சக)

கிரிதா ரகையணிந் தாலென்ன முத்தங் கிடந்தகொங்கை
யரிதார மன்னவ ளம்பகங் காட்டு மருக்கண்மதி
யெரிதார வெற்பு விழியா சனத்த னெழின்மறைசை
விரிதா ரகப்பொரு ளானே றுகந்தவன் மெய்யொளியே. ()

மெய்த்துத் தியான பணியாபரணன் விரைமருவுங் [ணிப்
கொத்துத் தியானஞ் செறிமறைக் காட்டுறை கோனையெண்
பொய்த்துத் தியானம் புறுசெருக் கற்றுப் புலனடங்க
வைத்துத் தியான சமாதிசெய் வார்க்கில்லை வன்பிறப்பே. ()

வன்போ தகவல் லியநெடுங் கான்சென்று மார்புடம்பி
னென்போ தகவல் லியமா தவம்புரிந் தேனினைப்பீர்
பொன்போ தகவல்லி யன்பார் சுருதி புரத்தபத்த
ரன்போ தகவல்லி யங்கொன்றை யாயென் றறைந்திடுமே. ( )

அறைக்கண் டவழரு வீக்கிரி வேத வனத்தண்ணிஞை
மறைக்கண் டரிய பிரானிறந்தாரைப்பொன்மானத்துய்த்துப்
பிறைக்கண்ட வேணியிற் பாணியும் பாணியிற் பேர்மழுவுங்
கறைக்கண்ட முந்தரச் செல்லுதல் பார்த்தி கருங்குழலே. ()

கருமந் திரிகர ணம்வேறு மாறு கயவர்ப்பற்றித்
தருமந் திரியு மெனையாள்வை யோவெற்றித் தானவர்தம்
பெருமந் திரியை யுதரத்தில் வைத்த பிரானளகை
யொருமந் திரிநண்ப னேமறைக் காட்டுறை யுத்தமனே.(சசு)

உத்தம ரத்தி யுரியார் மறைசை யொருத்தர் வெள்ளோ
லத்தம ரத்தி னிறைகங்கை வேணிய ராலெரிந்த
நத்தம ரத்தி முரசான் செழுங்கணை நல்கமுன்னாள்
வைத்தம ரத்தின்மெய்த் தூரில்வெந் நீர்விடு மங்கையரே. ()

மங்கல மந்தர முன்னூத நின்கண்ட வண்ணங்கண்டு
சங்கல மந்தர வங்கொண்டு கூனிச் சுரிமுகஞ்சார்ந்
திங்கல மந்தர மத்தான் கையிற்புக் கிருந்ததுநா
கங்கல மந்தர தம்புவி யான்மறைக் கானமின்னே. (சஅ)

கானவண் டானக் களிற்றைவர்க் காகக் கழுவிற்றங்கு
மானவண் டானது காணாத் தாமரை யானுஞ்செவ்வி
ஞானவன் டானத் துறைவோனும் வாவியி னாடிக்கொத்து
மீனவண் டானந் திரிமறைக் காட்டுறை வித்தகனே. (சகூ)

வித்தந் தியாக முதவா வுலோபர்க்கு வீணிற்சொற்பாட்
டைத்தந் தியாக பதியென்ப ரான்முத லாம்பிள்ளையை
மைத்தந் தியாகப் பெறுமறைக் காடர் வயங்குமுண்மைச்
சித்தந் தியாகத் தியாகரைப் பாடிலர் தீங்கறவே. (ருo)

தீங்கரும் பாரஞ் சொரிவயல் வேதத் திருவனத்துக்
கோங்கரும் பார மணிமுலைச் சாமளக் கோமளப்பெண்
பாங்கரும் பாரண சூலாயு தாவிப் படிவச்சுமை
தாங்கரும் பார மினிப்பிற வாமுத்தி தந்தருளே. (ருக)

தந்தம் படைத்த களிறொன்று தாக்கத் தனிபுரந்து
நுந்தம் படைத்தலை வேல்விழிக் கன்னியை நோக்கியதா
னந்தம் படைத்தலைச் சால்வழி யூர்க்கிடு நான்மறைசை
யிந்தம் படைத்த சடையான்வெற் பாடவ ரெண்சிங்கமே. ()

சிங்க முருக்குவன் றென்கால னாவியைச் செப்பிலின்னே
கங்க முருக்குர னாய்விருந் துண்ணக் கனத்திடுமென்
னங்க முருக்கும் பிணியங்கு மிங்கு மலையவைத்தாய்
பங்க முருக்கிதழ் சேர்மறைக் காட்டுறை பண்ணவனே. (ருங)

பன்னா முதலையின் சொல்லிபங் காளன் பகைவிடம்வன்
கன்னா முதலைவி ணேமியை யேவிய கண்ணனுயி
ருன்னா முதலையின் றேன்மறைக் காடனை யுன்னென்பதே
டென்னா முதலையின் கானிடைப் பூவி லினிநெஞ்சமே. ()

நெஞ்சத் திருக்கு மதிநிலையம் பூத நிலயமுநீ
கஞ்சத் திருக்கு மரிசேருங் கண்ணனெண் கண்ணனுநீ
வஞ்சத் திருக்கு மலமாயை நீங்கிய மாதவத்தோர்
தஞ்சத் திருக்கு வனத்துறை காரண தற்பரனே. (௫௫)

தற்கோல மென்ற கனிவாயை வேட்டுத் தயங்குமனைப்
பொற்கோல மென்றடி யேன்காண் குவன்புவி புக்கிடந்த
முற்கோல மென்றவி சம்புயன் போகி முதலமரர்
நிற்கோல மென்ற பொழுதால முண்ட நிருமலனே. (௫௬)

நிருமல ரஞ்சனை செய்பணி மாலத்தர் நீள்விசயற்
பொருமல ரஞ்ச னயந்திடும் வேத புரிவரைக்கோன்
மருமல ரஞ்சனை யன்னார் மறூர்சொல் வருவர்வன்கண்
ணருமல ரஞ்சனை யாதொழி யாய்மதி யாய்மனமே. (௫௭)

மனக்காக்கை மூவர் தமிழ்க்குயில் வாணியை வைத்தகுழை
யுனக்காக்கை வஞ்ச வினையேன்புன் னாவினுரைத்ததமிழ் [சங்
சினக்காக்கை வாயினுறுங்குரற்சொல்லொக்குஞ்சேண்முகிற்
தனக்காக்கை நீட்டு மறைக்காட்டில் வாழ்சிவ சம்பரனே. ()

சம்பாதி யந்தச் சடாயுவும் போற்றுந் தலைவன்புரம்
வெம்பாதி யந்த மிலாமறைக் காடன் விரைக்குழல்சேர்
செம்பாதி யந்தண் சமயமல் லாது திரிநெஞ்சமே
நம்பாதி யந்தகர் பொல்லாச் சமயங்க ளன்றெனவே. (௫௯)

நன்றென் புலமைந்தில் வாயொன்று மேதவை யாயினுஞ்சீர்
நின்றென் புலவு கறையாக்கை அஞ்சுமுன் னீள்பொதியக்
குன்றென் புலவர்முன் னோர்கவி யாயினுங் கூறியதால்
வன்றென் புலவனைத் தாக்கிய வேத வனத்தனையே. (௬௦)

வணக்கோதை யேயு மறுகா றுவைத்துவன் டேன்பிழிந்த
கனக்கோதை யேனளித் தீர்கரும் பாட்டிய கட்டிநல்கா
தெனக்கோதை வாரித் திருவே மதிமலி யென்றமிழ்விற்
பனக்கோதை பால்விடுத் தான்மறைக் காடன் பனிவரைக்கே

பனிச்சந் திரனணி வேணியுந் தாங்குஞ்செம் பஞ்சினுட
னனிச்சந் திரளன்னத் தூவியிற் சேக்குமஞ் சிறடிபாற்
றனிச்சந் திரவி னடந்தான் சிகர தளம்பொலிமே
லினிச்சந் திரவரை வில்லான் மறைசையிற் செந்தருவே. ()

உருப்பவ னுசன வாய்த்தேரை யிற்பிணிக் குள்ளுடைந்தேன்
கருப்பவ நாச நதிமணி கன்னிகைக் கான்மறைசை
நெருப்பவ னுசன காதியர் தேசிக நீள்பதுமத்
திருப்பவ னுசனப் பாற்கட லான்பணிந் தேத்திறையே. ()

வெத்திரப் பாண்டி யெனவைய மேற்கு மிறைவன்மதிக்
கோத்திரப் பாண்டிய னுகிமண் ணுண்டவன் கோலநரைக்
காத்திரப் பாண்டின் மறைக்கா டனேமல காயமென்னுஞ்
சூத்திரப் பாண்டி விறுமிறுங் காணுந் தொழுமுன்னமே. ()

முன்னுவ லாரிசை யுங்கூடற் சங்கர் முதியவெள்ளை
நன்னுவ லாரியன் மாமறைக் காடர் நயங்கொள்பச்சை
மின்னுவ லாரிவ ரைக்காண வேண்டும் விழிசதப்பத்
தென்னு வலாரி படைத்தா னவையு மிமைப்பிலவே. (௬௫)

இமையாத வம்பகர் சூழ்மறைக் கானத் திறைவகங்கைச்
சுமையாத வம்பக வன்செயச் சென்னி துளக்கரனே
கமையாத வம்பகல் வீசிய வாரிதிக் காசினியோ
ருமையா தவம்பக ரார்வேட னெச்சிலை யுண்டதற்கே. (௬௬)

உண்டலத் தானையன் பின்வந்த வண்டின மூதுந்துழாய்க்
கொண்டலத் தானைய னஞ்சுடர் மூன்றையுங் கொண்டமுக
மண்டலத் தானையன் கொண்டாடும் வேத வனத்தன்சிறு
கண்டலத் தானையன் றீருரி வாங்குங் கருணையெற்கே. (௬௭)

எற்பதங் கன்றுவளர் சோம னங்கி யிவர்செய்கையாய்
நிற்பதங் கன்று திருமறைக் காட னிறைவகுந்த
நற்பதங் கன்று நிரைமேய்த் தவற்கரு ளூரன்பெண்பாற்
சிற்பதங் கன்று மெனச்சென்ற நாதன் செயல்வண்ணமே.()

வண்ணவெண் கண்ணன் மரையாளுறைமறைக்காட்டிறைவர்
திண்ணவெண் கண்ணன் மதமாத் திரியுஞ் சிலம்பகம்பூ
வுண்ணவெண் கண்ண னிலையே நீதம்ப முயர்சுருதிப்
பண்ணவெண் கண்ணன்மலையேமுகநண்பைந்தொடிக்கே.

தொடிப்பாணி நித்திரை யாகாளென்காதிற் றுலைக்குமட்டோ
நொடிப்பா ணினித்தில தென்னும் விழுமழு நோமிப்பிவாய்
வெடிப்பாணி நித்தில மையோ சுடுமென்னும் வேதவன
முடிப்பாணி நித்தியப் பெம்மான் பவனி முறையிற்கண்டே.

கண்டங் கடுத்தவி ராமாலை வேதன் கழித்ததலை
முண்டங் கடுத்த மிசைந்திடும் வானின் முளைத்தபிறைத்
துண்டங் கடுத்த நுதலிம யாசலத் துய்யபச்சைப்
பெண்டங் கடுத்தது பார்மறைக் காட்டுறை பேரொளிக்கே.

ஒளியா னிறையுந் திவாகரக் கண்ண னுலகத்துயி
ரளியா னிறையுந்தி யம்புயன் வே[illegible]ந் கருஞ்சின்மய
வெளியா னிறையுந்தி முந்நீர் மறைசையில் வெற்பணங்கே
தெளியா னிறையுந் திசைத்தந் திரேன்வந்து சேருவனே. ()

சேரு வரிக்கடை யாளமில் லாவுருச் சித்தசர்போ
லாரு வரிக்கடை யேநீற்ப ராலணங் கேசெழும்பூந்
தாரு வரிக்கடை பண்பாடும் வேதத் தலத்திறைமுந்
நீரு வரிக்கடை வெங்காள போசன னின்மலைக்கே. (௭௬)

நீண்ட வராக மலைமா நிலங்கிண்டி நின்றறியா
றூண்ட வராக மலைகுனித் தான்மறை நற்பதியான்
மாண்டவ ராக மலையாமல் வைப்பவன் வான்புகழை
வேண்டவராகமலைக்குமுன் றேன்றும் வெறுந்தொளைவையே.

வெறும்பத்தி நிச்சய மில்லேனை யாட்கொண்டு வீட்டில்வைப்
புறும்பத்தி னிற்பத்து மாமகன் மாலய னும்பருக்கு [பா
மெறும்பத்தி நிற்குங் கடைமுத லாவியெவைக்குமருள்
பெறும்பத் தினிபங்க னேமறைக் கானப் பெருஞ்சுடரே.()

பெருங்கா சினித்தலங் கொண்டாடி யாடிப் பிறங்குகங்கை
யருங்காசி நித்த முறைவோர் மறைசை யமலர்வெற்பின்
மருங்காசி னித்தலை கொள்ள விடாதென்ன மார்பகத்தே
பருங்காசினித்தைப்பூண்கொங்கைமங்கைக்குப்பாரித்ததே.

பாரிக்கு மார முலையுமை யாட்கும் பகிரதியா
நாசிக்கு மாரப் புரமுஞ் சிரமு நயந்தளித்தான்
மூரிக்கு மாரனைத் தந்தான் மறைசையின் மூர்த்திதந்தான்
முரிக்கு மாரனுக் கில்லையென் மேற்பகை சாதிப்பதே. (எஎ)

சாதிப்ப ராகம மென்பயன் வேட்டுவன் சாதிப்புழு
வேதிப்ப ராகம் பெறல்போல மெய்க்குரு வாற்பெற்றியான்
பூதிப்ப ராக மணிந்தன்ப னாவதெப் போதருளா
யாதிப்ப ராகவி னுண்மறைக் கானத்தெ னம்பயனே. (எஅ)

புயற்கூடு போம்பொழில் வேதாரணியன் பொன்னுட்டகத்தே
மயற்கூடு மாடவர் நாரிய ருயிர் வாரியுண்ணு
முயற்கூடு தாக்க விருற்கூடுடையு முடிச்சிலம்பா
கயற்கூடு கண்ணிடை யாகாசந் தீட்டுதல் கைக்கரிதே. (எகூ)

அரிதிரி கைக்கு வடுவாழ் மறைசை யரன்வறுமை
பெரிதிரி கைக்குவந் தாண்டான் மெய்ஞ்ஞானம்பிறங்குசுடர்
விரிதிரி கைக்கு வினையேனிடத்தில் விளங்கு மட்சக்
கிரிதிரி கைக்கு நிகராம் பிறப்புங் கெடுவிப்பனே. (அ0)

கெடுப்போன கந்தையை நான்முகன்கே சவனார்க்குமுண்
டோன், கடுப்போனகந்தையற்பங்கில்வைத்தான்மறைக்கானு
வந்தா, னடுப்போனகந்தையுடையான் சிலம்பினம்மாதையொ
ப்பாய், வடுப்போனகந்தைமணிமுலைநின்குறைமற்றிலையே. ()

மற்றலத் தேரைய மின்றிநெஞ் சேயென்னமாயங்கொல்லோ
முற்றலத் தேரை விடுஞ்சாலிற் சங்க முழங்கு பண்ணைப்
பொற்றலத் தேரை மறைமறைக் கானப் புனிதன்கல்லுட்
பற்றலத் தேரைக்கு மேயளந் தானெப் படிப்படியே. (அஉ)

படிகந் தனையனை யான்மறைக் காடன்பொற் பாணியில்வேல்
பிடிகந் தனையரு டாதைய னுடகப் பேரவனைக்
கடிகந் தனைமுகில் கானனை யேத்தக் கருதுநெஞ்சே
விடிகந் தனைய மடவார் கலக விழிமையலே. (அங)

மையகற் றுனை முகன்றுதை மாணிக்க வாசகனு
மெய்யகற் றுனை மகிழ்மறைக் காடனை வேண்டியுன்னுஞ்
செய்யகற் றுனைமுக் கோலந்த ணீர்சுரஞ் சென்றனரோ
துய்யகற் றுனைப் புரந்தானன் னுனுநந் தோகையுமே. (அச)

தோகை யிராமன் மதன்பாண மங்கந் துளைத்ததுகா
ரீகை யிராமன் விதிகற்ப மானதென் மீதிற்சற்று
மோகை யிராமன் மறந்தா ரிராவண னுட்கவென்ற
வாகை யிராமன் பணிமறைக் காடர்வந் தாரிலையே. (அரு)

வந்தித்திக் குங்கணை யுங்கொண்ட வேள்பணி மான்குழற்கா
டுந்தித்திக் குங்கனி வாயும்வெண் மூரலு மொண்குழையும்
பந்தித்திக் கும்பெறத் தோன்றிய வேதப் பதியன்பொற்று
ளந்தித்திக் குந்தகு மென்னமன் றுடு மரன்கிரிக்கே. (அசு)

அரம்பையங் காட்டக வேதாரணி யத்த னுவியச்சுக்
குரம்பையங் காட்டவல் லான்சித சித்தன் குரூஉச்சடில
சிரம்பையங் காட்ட வணிந்தோ னரவிந்தச் சேவடியன்
பரம்பையங் காட்ட வெரிமுன் பஞ் சாகப் பறந்திடுமே. (அஎ)

பறக்கும் பருந்துவக் குங்கழி யூன்முடைப் பற்றுளதா
யிறக்கும் பருந்துவக் காக்கையை நீக்கி யினிப்பொதிய
வறக்கும் பருந்த தமிழ் மறைக்காட னருளைக்கொண்டு
துறக்கும் பருந்துதித் தற்கரி தாமுத்தித் தொல்கதவே. (அஅ

கதவாயு நீரங்கி மண்காய மான கடவுளினை
யுதவாயு மப்பனு மானவன் வேத முறைவனத்தான்
பதவாயு தக்கொடி வேடாதை கீர்த்தியைப் பாடுதற்குச்
சதவாயு நாவுந்தந் தானில்லை வாணி தலைமகனே. (அசு)

மகர சலந்தர ளந்தரு வேத வனத்தன்புய
சிகர சலந்தர ஞவியுண் டானடல் சேர்ந்திலங்கு
முகர சலந்தர வாலாச ஞவுரி யங்கையொற்றைப்
புகர சலந்தரப் போர்த்தா யெனவினை பொன்றிடுமே. (கூ0)

பொன்றுதை யம்புயத் திண்கால னஞ்சிப் புரண்டுவிழ
நின்றுதை யம்புயத் தான்மறைக் காட னிழல்வெற்பினீ
ரொன்றுதை யம்புயங் கன்வாய் விழுங்கிய தோமணித்தே
ரென்றுதை யம்புயன் மூடிய தோகின் றியம்பிடுமே. (கூக)

இயக்கோடை யாம்பன் முசுகுந்த னேத்து மிறைவவண்டு
முயக்கோடை யாம்பன் மலர்மறைக் கான்முத லேசுருதி
சயக்கோடை யாம்பன்முத் தேயடி யேன்சட்டகம்விடுநாண்
மயக்கோடை யாம்பன் மருந்தேநின் பார்வை வழங்குதியே.

குதிக்குஞ் சிதரரிக் கட்கயற் பாவை கொழுநன்மன்றிற்
சதிக்குஞ் சிதநடத் தான்கொன்றை மாலை தவழ்குழலி
மதிக்குஞ்சி தங்கிய வேணியன் வேத வனத்தலத்தி
லுதிக்குஞ் சிதலை யெறும்பாதி பேற்றை யுரைக்கரிதே. (கூ௩)

உரைத்தென்ன வண்மைபரன்மறைக்கானுறையோங்கன்முகி
னிரைத்தென்ன வன்மலிபூங்குழலாளெஞ்செனுமிரும்பைக்
கரைத்தென்ன வன்னகைப் பூண்மார்பஞ்சேரக்கருதுபொதி
வரைத்தென்ன வன்கொடி சாடிய வேல்விழி வாணகையே.

வானண்ட ருண்டி வழங்குஞ்செவ் வாய்ச்சி மணிகறங்கு
மானண்டர் வேயிசை கேட்கப் பொருளிணை வாய்கவைத்த
கானண் டலையினி னத்திறு முத்தினைக் காமரன்னந்
தானண்ட மென்றணைக் கும்மறைக் காட்டுறை சங்கரனே.()

சங்க மடங்கலை சூழ்மறைக் காடன் றடஞ்சிலம்பிற்
றுங்க மடங்கலை யன்னான் புரியுஞ்சொற் சூதையென்னோன்
பைங்க மடங்கலை நேரும் புறவடிப் பார்வைதக்கோர்
சிங்க மடங்கலை கற்பாரென் றுர்பொற் சிலைநுதலே. (கூசு)

சிலைக்கோடு மேல்வைத்த கோற்றே னுடைந்ததன் டேறல்வ
றலைக்கோடு வேத வனப்பெரு மான்மலைச் சங்கரிதன் [illegible]யற்
றலைக்கோடு பட்ட தழும்பான் சடில முடிமணியாக்
கலைக்கோடு வெண்பிறை யைச்செங்கை கூப்புதி கார்மயிலே.

காரண னேமத் தலைவே திகைமறைக் கானப்பரி
பூரண னேமத்த மாணவன் வில்லிடம் பொன்வெள்ளிமா
வாரண னோமத்த வாரணங் காத்திடு மாழிப்புவி
பாரண னேமத்த வேணியைத் தாங்கிய பால்விடையே. (கூஅ)

பாலம் பகவன் மயிலுரைக் கோவியற் பாவைபங்கன்
ஞாலம் பகவன் மருப்பினிற் கீன்றிடு நாரணனுங்
கோலம் பகவ னவின்மறைக் காடன் குரூஉச்சடில
மேலம் பகவ னமையாண் டருளுவன் மேதகவே. (கூகூ)

தகர நகரமுன் னுமைந் தெழுத்தர் தறுகண்முகப்
புகர ணகரத் தரவேழப் போர்வையர் பொங்கனலம்
பகர நகரத்தர் வேதங்கள் பூசித்த பான்மைபெற்ற
சிகர நகரத்த ரெற்களிப் பார்முத்திச் செந்திருவே. (க00)

மறைசையந்தாதி முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

---

மெய்கண்டதேசிகன்றிருவடிவாழ்க.